
# கவிதேசம்



இதழ் - 04 | யூலை,யூன் 2003 | மலர் 2

## ஈராக் மீதான போர் அமெரிக்காவை கண்டித்து கருணாநிதி கவிதை



**ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்க முயற்சி செய்வதை கண்டித்து தி.மு.க தலைவர் கருணாநிதி கவிதையொன்று எழுதியுள்ளார் அக்கவிதை வருமாறு :**

ஈராக் நாட்டில் இருக்கின்றதாம்
இம் என்றவுடன் பேரழிவு ஏற்படுத்தும்
ஆயுதங்கள் !
எண்ணற்ற ஆயுதங்கள்
இப்படிச் சொல்லி அமெரிக்க நாடு
ஆடு விழுங்கத் துடிக்கும் ஓநாய் போல்
'ஆ' வென வாய் பிளந்து நிற்குது காண்!
ஐயோ பாவம் அமெரிக்காவிடம்
ஆட்கொல்லி ஆயுதங்கள் எதுவுமில்லை
ஈராக்கிடம் தான் பேரழிவுப் போர்க்கருவி.
இங்கே "புஷ்" வைத்திருப்பதெல்லாமே!
ஜெபமாலை உத்திராட்சம் துளசிமணி இந்த
ஜெகம் வாழ நினைப்பதல்லால் வேறு
நினைவில்லை!
ஐ.நா.சபை அனுமதிக்க இயலாது போர் என
அறுதியிட்டு உறுதியாகச் சொன்னவுடன்
ஆவேசம் வந்த பூசாரி ஆடு கோழி இரத்தம்
ஆத்தாளுக்குப் படைக்க வேண்டும் பக்தா
அவற்றை உடனே கொண்டு வா
என்பது போல்
அமெரிக்க அதிபர் ஆணையிட்டு
கேட்கின்றார்
எண்ணெய்தேசத்தின்மீதுபோர்தொடுக்க
மண்ணையாளும் மற்ற நாடுகள்
வரவில்லையென்றால்
கண்ணை விற்று சித்திரம் வாங்கவா?
விண்ணைக் கிழிக்கும் ஏவு கணைகளை
என்னை நம்பி நானே விடவா என்று
அன்னைபூமி முழுவதிலும் ஆதிக்கம்தேடும்
அமரிக்க நாடு விடுகின்ற அறை கூவல்
அமைதி குலைக்கின்ற அர்த்தமற்ற சவால்
எத்தனை பூவும் பிஞ்சுகளும்
எத்தனை மலரும் மொட்டுகளும்
எத்தனை காயும் கனிகளும்
எத்தனை கொடிகளும் செடிகளும்
வாடி வதங்கி மரணக்குழிகளை



தேடிப் போவதற்கு வழி வகுக்கும்!
வேண்டுமென்று போருக்கு அழைப்பு
விடுப்போர்
காண்பதற்கு மியாலாத கற்கோட்டையில்
காவல் பலத்துடன் காத்துக் கொள்வர்!
தம்முயிரை
நம் உயிரோடு நடுத் தெருவில் பந்தாடப்படும்
வேலையின்மையெனும் நெருப்பு
தகிக்கின்ற வையத்தில்
வேலைக்கு ஆள் தேடும் நிலை தோன்றி
வேலி சூழ் இவ்வுலகின் நாடுகளில்
காலியாகும் மனத கூடுககள்
கணக்கில் அடங்கா!
வந்த சண்டை கண்டு விலகுவது
வீரமல்ல, அதற்காக
வலுவில் சண்டைக்குப் பாக்குவைப்பது
விவேகமல்ல!
விவேகபுரி விஞ்ஞானபுரி என்ற அமெரிக்க
விளம்பரங்கள் செய்தால் மட்டும் போதாதது.
விவேகமும் விஞ்ஞானமும் ஆக்கப்பணிகள்
வேர் விட்டு விழுது விட்டுக்
கிளைப்பதற்குத்தான்
வேரில் விழுதில், விஷ நீர் ஊற்றி
வீழ்த்த அல்ல உலகை விசாரத்தில்
ஆழ்த்த அல்ல

ஆசிரியர். கவிஞர் "திக்கவயல் தர்மு"

ரூபா[illegible]/= 20/-

# கவிதேசம்: கவிதைக்காலாண்டுச் சஞ்சிகை

இதழ் 4 | மலர் 2 | யூன், யூலை 2003



**கவிதேசம்**

ஆசிரியர் திக்க வயல்.சி.தர்மு

**தொடர்புகள்**

481,பார் வீதி
மட்டக்களப்பு


இங்க பிரசுரிக் கப்பட்ட கவிதை கட்கு நாமே பொறுப்பு.


பதிப்பாசிரியர்
இமயவரம்பன்


இங்கு எழுதப்படும் கவிதைகள் யாவற்றுக்கும் சன்மானம் உண்டு

பொருளடக்கம் — பக்கம்


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| ஆசிரியர் உரை | 1 |
| அன்றும் அன்றும் | 3 |
| ஐயா புல்வீர்காள் | 4 |
| பலகால் | 5 |
| விபுலானந்தர் வாய்மொழிகள் | 6 |
| வெற்று இரவு (அன்னிய கவிதைகள்) | 7 |
| காதல் வாய்பாடும் கலியாணக்கணக்கு | 8 |
| கவிதை ரவுண்ட அப் | 9 |
| ஐந்துலாம்படி | 11 |
| கவிதை அகராதி | 11 |
| அக்கரைப் பார்வை | 12 |
| சொன்னார்!சொன்னார்! | |
| தான்தோன்றிக் கவிராயர் | 14 |
| விடியலை நோக்கி | 16 |
| கம்பன் கவியரங்கம் | 18 |
| மறியல் கவிதை | 22 |
| ரசனை | 22 |
| செவிடன் சங்கு | 23 |
| இறந்ததன் பின்னால் | 24 |
| கொலையின் பின் வள்ளுவன் விளக்கம் | 24 |
| மூன்று பாவனைகள் | 25 |
| துன்யா சேதீன் | 25 |
| சொன்னார்கள் | 26 |
| நல்ல கலைஞன் | 27 |
| அன்னிய அப்பிள் | 27 |
| வலுவிழந்த வலு | 28 |
| வாழ்க்கை | 29 |
| தாழை என்றால் தாழம்பூ அல்ல | 31 |
| பெண்மணி | 34 |
| ஆசையைத் தீர்த்திட வா! | 35 |
| கம்பரும் அம்பிகாபதியும் | 37 |
| சிறையை விதித்தது முறையா | 40 |


உயிர் இருக்கும் வரை உடலைச் சுமக்க வேண்டும். தலை இருக்கும் வரை சிந்தனையைச் சமைக்க வேண்டும்.

# ஆசிரியர் உரை



கவிதேசத்தின் நான்காவது இதழ் இது! சிறிய இதழாக ஆரம்பித்த கவிதேசம் இந்த ஓராண்டுக்குள் தமிழ்த் தேசங்களின் எல்லைகளை எட்டியிருக்கிறது. தமிழ்க் கவிதைகட்கு ஓர் இதழ் வெளியிட்டுத் தொடர்ந்து நடத்த முடியுமா எனக் கேள்விகள் கேட்டார்கள்!

'சில காலங்களில் சில பங்களிப்புகள்' இதுவே எமது விடை.

நாம் சந்தோசமாக இருப்பதற்காகப் பலர் பாடினார்கள்;பாடியதை எழுத்தாணி கொண்டு சுவடியிலே எழுதினார்கள்;போய்விட்டார்கள்.அவர்களின் நாவில் உதித்ததை இன்று நாம் பாடுகிறோம்;அப்படி இருந்திருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும் என விமர்சிக்கிறோம்.

நாமும் சில சொல்ல நினைக்கிறோம்; எழுதுகிறோம்;இது அமரத்துவமான படைப்பு என எங்களுக்குள் புளகாங்கிதம் அடைகிறோம்;போய்விடுகிறோம்!

சிகிரியாவிலே ஒரு சிலர் அஜந்தாவிலே வேறு சிலர் ஓவியமாகக் கிறுக்கினர்.பார்க்கிறோம்;ரசிக்கிறோம்;பல தலை முறைகள் இதனை ரசிக்கப் போகின்றனர்!நாம்வாழும் உலகில் கம்பனாகவோ,ஷேக்ஸ்பியராகவோ,இளங்கோவாகவோ நாம் இருக்கப் போவதில்லை.ஆனால் நாம் வாழும் இந்த நூற்றாண்டு மின்சாரயுகம்! கவியத்தை நான் தீட்ட, ஓவியத்தை நீ வரைய,உலகமெல்லாம் ரசித்து நிற்கக் கூடிய மகோன்னதமான காலம் அல்ல இது.ஆனாலும் எமது உணர்வுகளைப் புதிய கவிதைகளாகக் கிறுக்கியாவது காட்டக்கூடிய நிலை,

இன்று இருந்தது போல்...சத்தியமாகச்
சொல்லுகிறேன்......
புகழேந்திக்கோ,ஒட்டக்கூத்தருக்கோ இருக்கவில்லை
கோவணத்தோடு உலாவிய பட்டினத்தார் கூட மரபுக்
கவிதைகளின் இலக்கணத்தைத் துறைபோகக்
கற்றபின்பே
கவிதைத்துறையில் காலடி வைக்க முடிந்தது.
ஆனால் புதிய கவிதை யுகமோ உணர்வுக் கவிஞர்களை,
கலை நெஞ்சங்களை ஒன்றாக இணைத்து வைத்துள்ளது.
20 நூற்றாண்டு ஓடிவிட்ட இந்தத் தமிழுலகில் எத்தனையோ
கவிஞர்கள் நாம் ரசிப்போம் எனப்
பாடினார்கள்;ஆடினார்கள்!
நாம் அதனை ரசித்தோம்; படித்தோம்! சந்தோசமுற்றோம்!!
இப்போது நாமும் சில செய்து வைக்க
எத்தனிக்கிறோம்.ஏனெனின் புதிய சமுதாயம் ஒன்று எழுந்து
வந்து ஏமாறக்கூடாது!

எங்களுக்கு முந்திய ஆண்டுகளில் எமது முன்னோர்களும்
ஏதோ எழுதி வைத்தார்கள் என்பதை இனம் காட்டவே
கவிதேசம் முயல்கிறது.

எத்தனை ஆண்டுகள்
கவிதேசம் வந்தது என்பது
வரலாறாக இருக்காது!
அதில் சொல்லப்பட்ட ஒரு
சில கவிதையாவது எதிரேறிச்
செல்லட்டும் அடுத்த தலைமுறைக்கு!
அதுவே கவிதேசத்தின் இலக்கு!

ஆசிரியர்

ஜஐஜஐஜஐ

# அன்றும் இன்றும்

அன்று
பச்சைப் பெருமாளும் மொட்டைக்கறுப்பனும்
பச்சைப் பசேலென அழகாய் ஆடி நின்ற
பூமியது!
கன்னங் கரேலென்ற கந்தப்பரும்
கச்சையுடன் மண்ணை வெட்டி
வகையான பனங்கிழங்கும்
தொகையான வத்தாளையும்
மிகையாகப் பிடுங்கி நின்ற காலமது!

இன்று!
காலிழந்த கந்தப்பரும் கண்ணீரைச்
சொந்தமாக்கி பொய்க் காலில் வெளி வர
மேடாய்ப் போன களனியிலே
ஒடாய்ப் போன நாய்களெல்லாம்
ஓடித் திரிய
வெள்ளை வெளேரென்ற வெள்ளையனும்
மோப்ப நாயுடன் ஏப்பம் விட்டே
எதையோ தேடுகிறான்
இன்னுமா புரியவில்லை?
குதி பறக்கும் மிதி வெடியும்
வகை தொகையாய் தாங்கி நிற்கும்
பூமியது
புரிந்து விட்டால் தெரிந்து வை
பாதங்களை
தப்பிடுமே உன் கால்கள் எப்பொழுதும்!

யாழ்-சுந்தரி பூபாலசிங்கம்

# ஐயா புலவீர்காள்...!!

கையில் ஒரு பேனா...!
காகிதமும்....கிடைத்துவிட்டால்
கன்னா பின்னா எனக் கீறி
கவிதை எனப் பேரை வைக்கும்
ஐயா புலவீர்காள்
அடியேன்... ஒரு விண்ணப்பம்.

அரியணையில் இருந்து
ஆட்சிசெய்யம் தமிழ்மகளை
அம்பலத்திற்கு இழுத்து வந்து...
துச்சாதனன் செய்யும்
துன்மார்க்கம் இனி வேண்டாம்.
வாய்க்குள் நுழையாத
வட சொல்லைப் பொறுக்கி..
வண்ணத்தமிழ்த் தேனுள்
வலியக்கலந்தெடுத்து மன
வாய்க்கள்ளெ திணிக்காதீர்...!
எதுகை மோனை எதுவின்றிப் போனாலும்
கரு விற்கு கூட?
கவிதையிலே பஞ்சமா?
புழுத்து நாறுகின்றன
சாக்கடை நீரெல்லாம்..!
சந்தன வாடையென்று
சத்தியமாய் சொல்லாதீர்!
சீத்தலைச் சாத்தனெல்லாம்..
சாகாது இன்றிருந்தால்...
எழுதுகோலால் உங்களை
எறிந்தே கொன்றிருப்பான் ..
எழுதுங்கள் புலவீர்கள்...!
இனிமேலும் தமிழ்க்கவிதை
எங்களுக்கு இனிக்கட்டும்

கறுவாக்கேணி
முத்துமாதவன்

# பல கால்

ஒற்றைக் காலில் நிற்பவர்
யாவரும் அர்ச்சுனர் தாமோ?
இரட்டைக் காலில் நிற்பவர்  யாவரும்
மனிதர்கள் தானோ?

மூன்று காலில் திரியும் மனிதர்கள்
ஊழ் வினை சூழ்வினை
அறுத்தவர் தாமோ?
தவறணை மூடி தனது வீடென
அயலான் வீட்டினை
தட்டி எழுப்பும்
நாலு கால் மனிதர்கள்
நல்லவர் தாமோ?
ஆறடி மண்ணினுள்
அடங்கிடு மட்டும்
எத்தனை காலடி
இந்த மானிடர்?
ஐந்தடி ,ஆறடி எழடி
எடுத்து மானிடர்
எட்டுக்காலுடன்
வேகுவர்,சுடர்மணி
தாமென!

நகுலன்

# விபுலானந்தர் வாய்மொழிகள்.

தான் உண்பது மண் உண்பது
பிறர் உண்பது சிவம் உண்பது

அரனடி பற்றிய திருவுடையார்க்கு
மறலியும் அஞ்சு வானாதலின்
அத்தகையினருக்கு யாவும் நல்லன
வேயன்றித் தீயனவாகா!

வல்லோரிடத்திலே ஆசையும் சினமும்
அற்ற வலிமை நான்!உயிர்களிடத்தில்
தருமத்துக்கு மாறுபடாத காதல் நான்.

புகையினால் சூழப்பட்ட தீ போல
தீமை செய்தவன் தீமையால் மூடப்
பட்டிருக்கிறான்.அவன் தீமை
அவன் அறியவோ அறியாமலோ
வெதுப்பிக் கொண்டு தான் இருக்கின்றது.

காந்தத்தோடு சேர்வதனாலே உருக்கும் காந்தமாகி விடுகின்றது. மனமும் ஒரு பொருளை எண்ணுந் தோறும் அப்பொருளின் இயல்பை அடைந்துவிடுகிறது. தன்னை இறைவனாகப் பாவிப்பவன் இறைவனாக விட்டாலும் மகாத்தான குணங்களைப் பெறுகின்றான்.

தானியம் முளைக்க வேண்டுமானால் விதை அமிழ்ந்து போகும். அவ்விதமே உயிர் வாழ்வு பயன்தர வேண்டின் சாகாமல் இருக்கமுடியாது.

என்ன குறை வந்துவிட்டது? வரப்போகிறது எமக்கு? நம்மைப் பாரகசிப்பவர்களை நாம் தூசாகவே மதிப்போம்.அவர்கள் என்ன மகாத்மாக்களா? மகாத்மாக்கள் என்றால் மற்றவர்கள் குறையையா தேடுவார்கள்?

# அன்னியக் கவிதைகள்

## வெற்று இரவு

மகிழ்ச்சியிலும் துயரிலுமான என்
குரலுக்கு
அந்த இதயம் இனி
பதில் தராது.
எல்லாம் முடிந்தது
நீ இல்லாமல் போன
அந்த வெற்று இரவுக்குள்
எனது பாடல்
ஒலித்தபடி செல்லும்.
மகன் சொல்கிறான்
நான்
அறிவியல்பூர்வமாக இல்லை.
மகள் சொல்கிறாள் நான்
தர்க்க பூர்வமாய் இல்லை
மருமகன் சொல்கிறான்
நான்
அதிகார தோரணையில் இல்லை.
என் கணவனோ
ஒன்றும் சொல்லவில்லை
புன்னகைக்கிறார்.
என் கரத்தைப் பற்றிக் கொண்டு
உறங்குவதைப் போல் அவர்.

தமிழில் கடலோடி.
அன்னா அகமத்தோவா
(ரஷ்யா)

## காதல் வாய்ப்பாடும் கலியாணக் கணக்கு

காலை வேளையில்
களையுடன் துலங்கும்
கண்டி மாநகரில்.......
கண்ணில் மையிட்டு
கலங்கும் விழிகளும்
கபடமற்ற சிரிப்புமாய்
காத்திருக்கும் கன்னியே!
கண்ணைக் கவர்ந்து
கருத்தில் நிறைந்து
காதல் மொழிபேசிக்
கற்பனை உலகில்
கலந்திடச் செய்யும்
காதலன் வருவான்
கனிமொழி தருவான்.
கைவிடமாட்டேன் உனைக்
காலமெலாம் புதுக்
கவிதையும் பொழிவான்
கரைந்து நீயுருகிக்
கணப்பொழுதில் உந்தன்
கன்னிமை இழப்பாய்.
கலியாணம் நடக்குமென
கவலையை மறப்பாய்
கனவினில் மிதப்பாய்
கடைசிவரை பகற்
கனவு பலிக்காமல்
களங்கமும் படுவாய்
காமச் சுகங்களிக்க
காதல் வாய்பாடு-இது

கலியணம் என்ற
கணக்கைத் தீர்க்காது
கவனமடி பெண்ணே!
கலியாணத்தின் முன்
காதல் வாழ்க்கையா?அது
காவியத்தில் தானடி
கலியாணத்தில் பின்
காதலித்துப் பாரடி-அது
கண்ணிய வாழ்வடி.

ந.பார்த்திபன்

## கவிதை ரவுண்ட் அப்

துப்பாக்கி சுமக்காத
அதன் வில்லை அழுத்திப் பார்க்காத
நானும் ஒரு போராளி தான்.

என் எதிரிகளை நான் ஒருபோதும்
தடியால் அடித்ததோ
கத்தியால் வெட்டியதோ இல்லை.
சொற்களால்தான் சுட்டிருக்கிறேன்.

உண்மையைச் சொன்னால்
நான் ஒரு தமிழன்
என் துயர்களையும்
எனது நாட்டு மக்களின்
துயர்களையும்
தமிழில் தான் யாரிடமாவது
சொல்லி ஆறுதலடைவேன்.

என் தமிழிடம் அரவணைக்கும்
வார்த்தைகளும் உண்டு.
எதிரியைச் சுட்டெரிக்கும்
எரிதழல் வார்த்தைகளும்
உண்டு.

என் தமிழ்மொழி ஆரோக்கியமானது.
யாருக்கும் அடிபணியாதது.
எனது பேனா முனையில் இருந்து
விழும்போது அது ஆவேசமானது.

துப்பாக்கி சுமந்து
அதன் வில்லை அழுத்தி
எனது மக்களைக் கொன்று குவிக்கும்
விசப் பூச்சிகள்
என் மண்ணில் இருக்கும் வரை
நானும் போராளியாகத்தான்
இருப்பேன்.

துப்பாக்கி சுமக்காத
அதன் வில்லை அழுத்திப் பார்க்காத
நானும் ஒரு போராளி தான்.

தானா விஸ்ணு.
நன்றி - ஞானம்

# ஐந்துலாம்படி?

ரோமா புரி எரிந்த
நாளையில்
நீரோ மன்னன் வாசித்தான்
பிடில்!
நம்ப மறுப்போரே வம்புரை
செய்வீரே
கேளுமோர் வார்த்தை!
தீயில் எரிந்து திக்குமுக்காடி
இறந்து கிடக்கின்றார்
ஐந்துலாம்படிச் சந்தியிலே
நீரோ....என்ன சொல்கிறீர்?
இனவாதத் தீ என்று
இங்கிதமாய்க் கதைபேசி
சுட்ட கதையினிலே சுகமாகக்
குரல் எழுப்பி
வந்த சமாதானம்
வராது போ எனச் சொல்லி
பிடில் நீரோ பிடிக்கிறீரோ?

கல்லடிக் கதிர்காமு.

## கவி அகராதி

அருந்திடர் :-எளிதில் போக்க முடியாத மேடு
ஊறல்:-ஊற்று
ஆர் :- ஆர்த்திப்பூ
வேறல்:- வெற்றி பெறுதல்
குடிப் பொருள் :- குடிக்குத் தக்க செயல்
மெய்ம்மலி :- உடம்பில் பூரிக்கும் உவகை
இகல் :- மாறுபாடு
பிஞ்ஞகன்:-பின்னகன் என்னும் தலைக்கோலமுடைய இறைவன்.
உறை:-மழை
இரும்பௌவம் :- கரிய கடல்

தொகுப்பு :-மேகலைவாணி

# அக்கரைப் பார்வை

**புதுக்கவிதை**

பழத்தை யாருக்குக்
கொடுப்பது என்று
பார்வதிக்கும் பரமனுக்கும்
திண்டாட்டம் வந்ததால்
புதுக்கவிதைக்கும்
மரபுக்கவிதைக்கும்
பந்தயம் வைத்தார்கள்!
'மரபு' மயில் வாகனமேறி
உலகைச் சுற்றி வந்து
பார்த்தபோது
புதுசு பழத்தைச்
சாப்பிட்டுக் கொண்டிருந்தது.

கவிஞர் தணிகைச் செல்வன்
(தமிழ் நாடு)

⌘⌘⌘

**மாங்கல்ய மகிமை**

மாங்கல்ய மகிமையை
மனைவி அறிவாள்;
மணவாளன் அறிவான்
இவர்கள் இருவரையும் விட
மார்வாடியே
அதிகமாய் அறிவான்.

கவிஞர் தமிழன்பன்
(தோணிவருகிறது)

⌘⌘⌘

இன்னுமா (?) க்கள்

இன்னுமா
படிப்பு முடியல்ல?
முடிந்தது.

இன்னுமா
வேலை கெடைக்கல?
கெடச்சாச்சு.

இன்னுமா
கொளந்த பொறக்கல?
பொறந்தாச்சு.

இன்னுமா
வீடு, கட்டல?
கட்டியாச்சு.

இன்னுமா
'ரிடயர்ட்' ஆகல?
ஆயாச்சுய்யா!

இன்னுமா சாகலையான்னு
கேட்டாலும் கேப்பானுக!
வெவரங்கெட்ட பயலுக.

'அட்டிகை, அம்மா, நான்'
கவிதைத் தொகுதியிலிருந்து...

## அழகு

அழகாயில்லாததால்
அவள் எனக்கு
தங்கையாகி விட்டாள்

கலாப்பிரியா
(மற்றாங்கே பக் 6)

⌘⌘⌘

## சாவிலும் ஒரு சுகம்

ஒரு கட்டு வெற்றிலை
பாக்கு,சுண்ணாம்பு
புகையிலை
வாய் கழுவ நீர்
∴ பிளாஸ்க் நிறைய
ஐஸ்
ஒரு புட்டிப் பிராந்தி
வத்திப்பெட்டி சிகரெட்
சாம்பல் தட்டு
பேசுவதற்கு நீ
நண்பா
இந்தச் சாவிலும்
ஒரு சுகம் உண்டு.

கவிஞர் நகுலன்
(சுருதிப.23)

# சொன்னார்! சொன்னார் தான்தோன்றிக் கவிராயர்.

புகழுடம்பு

தக்க சமயத்தில் சாகத் தெரிந்தோர்க்கே
ஒக்க புகழ் வந்துறும்!

உலக சமாதானம்

தத்தம் அலுவலையே தாம் பார்த்தால் இவ்வுலகில்
எத் தொல்லையேனும் இல்லை.

நாகலோகம்

நன்றாய் நிமிர்ந்து நடந்தாற் செருக்கன் நடைகுனிந்து
சென்றால் பயங்கொள்ளி, செட்பிய்
இருந்தாலோ சீ கறுமி

நின்றால்,குடித்தால்,செலவிட்டால்,ஊதாரி சீரழிவான்

என்றே பழிக்கும் இகம் நாகம் போல் நாக்கு இரண்டுடைத்தே

தீமைக்கியல்பு திடீர்!

நல்லதை உணரமாந்தர் நாட்பலவாகும்;தீமை
வல்லது; நொடியில் மக்கள் வாங்குவர் அதனை நெஞ்சில்;

பல்பயன் தரும் சஞ்சீவிப் பாகுடல் சேரநாளாம்
கொல்விசம் உடனே ஓடிக் குருதியில் கலக்குமன்றோ!

**அளவுக்கு மிஞ்சினால்**

உண்டு வயிறுமுட்டி உப்பிவிட்டாற் போதுமென்பீர்
கொண்டவளோ நான்கு குழந்தைகளைக் கண்டு விட்டால்
போதுமென்பீர் மாந்தரே...பொன்பொருளோ மீந்த பின்னும்
எதுக்குப் போதாதென்பீர்?

**வெற்று ஆரவாரம்**

ஆழக் கடலில் அலைபேசாதே! கரைதான்
ஓலமிடும் கல்லாரை ஒத்து.

**நல்லது வாழும்**

இது நன்றே! இது தீதென்
றுணர்ந்து தேறும்
எவன் வாழ மட்டும் என்றன்
எழுத்தும் வாழும்

அமரகவி தான்தோன்றிக் கவிராயரின்
(ஊரடங்கப் பாடல்களில் இருந்து)

**கவிதை ரவுண்ட் அப்.**

பூப்படையாப் பெண்களெல்லாம்
பிள்ளை பெற வந்தது போல்
கவிதை
யாப்பறியாப் பேர்களெல்லாம்
பாப்புனைய வந்துவிட்டா.

செங்கதிரோன்

## விடியலை நோக்கி

தூங்க மறுத்த
துப்பாக்கிகள் துவண்டு
சனங்களின் சடலங்கள்
சாடையாய்க் கேட்கிறது!

ஊருக்குள்
பிணவாடைகள் நீங்கி
உயிர்களை மட்டுமே
உணவாகக் கொண்ட
பீரங்கிகள் தூங்கிப் போக....

இனமதம் என்ற
இருட்டுப் போர்வைக்குள்
இதிகாசம் படைத்த
அறியாமை அகன்று
குணநலன் மாறி மானிடங்கள்
இணக்கம் கொள்கிறது!

சதை கொறித்தே
சந்தோஷித்த
கிரேனைட் ஷெல்கள்
சளைத்துப் போக......

விதையுண்ட உயிர்களின்
விரகங்கள்
வேர்பிடிக்கின்றன!

தமிழின் தலைகொய்து
தெறித்துச் சிதறிய
குருதி நீரில்
குரல்வளை நனைத்துக் கொண்ட
குள்ளநரிகளின்

கொடூரங்கள்
கொலைசெய்யப்பட்டு

மனித தர்மம்
மணிமுடி சூடிக்கொண்டதோ!

அப்போ
கந்தகக் காற்றுக்களை
இனி எங்களின்
இதயங்கள் சுவாசிக்காது!

ஆம்!
தணற்பாதைகளை
எங்களின் பாதங்கள்
தரிசிக்காது!

அதோ...!
வெகுதூரத்தில்
சிறகடித்த
வெண்புறாவென்று
வேகமாய் எங்கள்
வறண்ட தேசம் நோக்கி!

மலைக்குயில்
து.பிரபாஹர்
ஹப்புத்தளையூர்

# கம்பன் கவியரங்கம்

மு.மேத்தா

வில் நான்!வீரத்தின்
விளைநிலம் நான்

வளைந்திருக்கும் என்னை
வைத்துத்தான் இராமபிரான்
நிறையப் பேரை
நிமிர்த்தினான்

ஏகபத்தினி விரதன்
என்றே
இராமனை
எல்லோரும் நினைக்கின்றீர்
அவனுடைய
முதல் மனைவி நான் தான்

⌘⌘⌘

**வேலாயுதம்**

வேலாயுதம் என்று
பெயர் வைப்பதுண்டு
எவரேனும்
வில்லாயுதம் என்று
பெயர் வைப்பதுண்டா?
ஆயுதம் செய்யும்
அட்டகாசங்களை
மறம் என்பார்
வில்லாம் நான் செய்த
வீர விளையாட்டையெல்லாம்
அறம் என்பர்
வில்லறம் என்றே
வியந்து கொண்டாடுவர்

## மிதிலையில்

மிதிலையிலே இராமபிரான்
வில்லை முறித்து என்னை
விவாகரத்துச் செய்ததெல்லாம்
உண்மைதான்.

என்றாலும் அவனைநான்
தழுவுகின்ற உரிமையை யாரும்
தட்டிப் பறிக்கவில்லை.

ЖЖЖ

## வில்

வில் முறிக்கும் போட்டியை நீங்கள்
விரும்பியது ஏன்?
என்று
மிதிலை வந்த இராமனை
பிரபல பத்திரிகையொன்று
போட்டி கண்டது
அளவாகப் புன்னகைத்து
அண்ணல் பதிலளித்தான்
''மாமனாரை எப்படி
மடக்குவது என்பதற்குரிய
பயிற்சியாகவே இதனைப்
பார்க்கிறேன்"

ЖЖЖ

## கால்பட்ட இடம்

கால்பட்டே ஒரு கல்
பெண்ணாக மாறுமென்றால்
இராமனது
கைபட்டால் சூர்ப்பனகை
கற்புநகை யாகாளா?

கல்லையும் பெண்ணாகக்
கருதினான் இங்கே ஏன்
ஒரு பெண்ணையே
கல்லாக உதறினான்?
உயர்குலத்துப் பெண்ணென்றோ
அகலிகைக்கு உதவி செய்தான்?
பஞ்சவடி அன்பின்
பஞ்ச வடிவானதோ?

அரக்கர் குலத்தில்
பிறந்து விட்ட காரணத்தால்
இரக்கமின்றி ஒருத்தியை
இழிவு படுத்துவதோ?

அழகு என்பது ஓர்
அனுமதிச் சீட்டு?
இதன் மூலம் எல்லா
இடங்களிலும்
எளிதாக நுழையலாம்
எவருடன் வேண்டுமானாலும்
இனிமையாய் இழையலாம்

யாரான போதும்
தாலிக்கு மரியாதை
தர வேண்டும்!
இராவணன்
சீதையின் தாலிக்கு
மரியாதை செலுத்தவில்லை
அதனால் தான்
இலங்கை நகரை
எரித்துக் கொழுத்திய

அனுமானைக் கட்டுதற்காய்
எல்லாக் கயிறுகளும்
எழுந்து வந்தபோது
தாலிக் கயிறுகள் மட்டும்
இணைந்து வரவில்லை!
தாலியெனும் வேலியைத்
தாண்டிக் குதிப்பவர்க்கு
துணை நிற்கக்கூடாது
என்ற
தூயதொரு காரணமோ?

கம்பன் கவியரங்கம்
என்ற நூலில் இருந்து

## கவிதை ரவுண்ட் அப்.

## பம்பரம்

ஆனையுண்ட விளாங்கனியை
ஆசையுடன் பொறுக்கி
அங்கிருக்கும் துவாரத்தில்
அழகாய்த் தடி இறுக்கி
சேனைகளாய்ச் சிறுவரெல்லாம்
சேர்ந்தொன்றாய்க் குழுமி
சிங்கார மாயதனைச்
சிறு கையால் சுழற்றி
பம்பரங்கள் சுற்றிவிளை
யாடுவதைப் பார்த்தால்
பகலிரவு தோன்றாது
பசிதுக்கம் வாரா
அம்புவியோர் வாழ்க்கையினை
அழகாக இந்தப்
பம்பரத்தைப் போலென்றார்
படித்தவர்கள் உண்மை

காவியமாமணி அகளங்கன்

# கவிஞர் காசி ஆனந்தனின் மறியல் கவிதை

இளையாகும் காலைப் பாணில் வண்டிருக்கும்

சுரையளவு கல்லிருக்கும் சோற்றில்

அரை அவியல் மாட்டிறைச்சித் துண்டின் மயிர் இருக்கும்

என்னைக் கேட்டிருக்கும் கீரைக்கறி

கவிஞர் காசி ஆனந்தன்.

ஜஐஜஐஜஐ

# ரசனை

நிர்மலமான நீரோடையில்
ஆம்பல் மொட்டுக்கள் இரண்டு
மேலெழுந்தும் தாழ்ந்தும்
என் கண்களைக் கவர்ந்தன
கண்கள் இமைக்க மறைந்தன.
மொட்டுக்கள் மறைந்திடுமோ
என அஞ்சி.

சந்துரு; மன்னார்.

ஜஐஜஐஜஐ

# செவிடன் சங்கு

செவிடன் காதில்
ஊதிய சங்கெனச்
சொல்லி வைத்தீர்
சொல்லி வைத்தீர்
பழ(ம்) மொழியுடன் !

செவிடர் நாம்
சொல்லுகிறோம்
நீங்கள் ஊதியது
கேட்டதுவே எம்
காதுகளில் !

சங்கெடுத்து நாம்
ஊதுகிறோம் சந்திகளில்!
செவிடில்லா மானிடரே
காதுகளை இவ்விடத்துச்
செவிமடுங்கள் !
உங்கள் சங்கெடுத்து
உங்கள் காதுகளில்
ஊதுகிறோம்....
வேண்டும் சுதந்திரம்
விரைவுடனே.......

தமிழ்வண்டு

## இறந்ததன் பின்னால்

இறந்ததன் பின்னால் என்னை
எண்ணி ஒரு நிமிடம் தன்னை
மறந்திரு துளிநீர் கண்ணில்
மல்கி மனிதச் சாதி
சிறந்திடக் கிரியை வாக்கு
சிந்தையால் உழைப்பதற்கு
மறந்திலன் என்று என்றோர்
மானிடன் நினைத்தால் போதும் .

கவிஞர் சில்லையூர்
செல்வராசன்

## கொலையின் பின்பு வள்ளுவன் விளக்கம்!

ஒரு மனிதன் நோயோடும் வறுமை
மிகுந்தும் இவ்வுலகில் வாழ்கிறான்
ஐயோ...இவன் பாவம் என
நாம் நினைக்கின்றோம்!
ஆனால் அவனோ முற்பிறவில்
ஓர் உயிரை உடம்பில்
இருந்து நீக்கியவன் என
வள்ளுவன் கூறுகிறார் அக்குறள்
கீழ் வறுமாறு:-
''உயிர் உடம்பின் நீக்கியார் என்ப செயிர் உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கையவர்

குறள் 330

தெரிவு:மேகலை வாணி

## மூன்று பாவனைகள்

எல்லோரும் இன்புற்று இருக்க வேண்டும்
என நினைப்பது மைத்திரி பாவனை

பிற உயிர்கள் துன்பத்தை
நீக்கப் பாடுபாடுவது கருணா பாவனை

தாம் பண்ணிய நல்வினைப்
பயனை நுகர்ந்த உயிர்கள்
மகிழ்ச்சியை அடைவது
கண்டு முகிழ்தல் முகிதபாவனை.

தொகுப்பு-மேகலை வாணி

## கவிதை ரவுண்ட் அப்

### துன்யா சேதீன்

இக்கவிதை மகா கவிஞர் இக்பாலின் கவிதையில் ஒன்று இதனை எழுத்தாளர் வ.அ.இராசரத்தினம் தமிழில் மொழி பெயர்த்து உள்ளார். இதன் மொழிபெயர்ப்புக் கீழ்வருமாறு :-

‘எரியும் நெருப்பில் வீழ்ந்திட்ட
ஈசல் சொல்லும் கதையைக் கேள்
ஒரு கணந்தான் என்றாலும்
உலக வாழ்வில் விருப்பைத்தா
கருகும் எனது புண் சடலம்
காலையரும்பும் போதெனிலும்
இரவு முழுவதும் போராட
இறைவா எனக்கு வலியைத்தா.

# சொன்னார்கள்

ஒரு தீமையைப் பற்றிய அச்சம் பல வேளைகளில் அதைவிடப் பெரியதீமைக்கு வழி வகுக்கிறது.

நிக்கோலா புவாலோ

கல்வி எனப்படுவது ஒருவன் தன்னுடைய தாய்மொழியை நன்கு உணர்ந்து பேசப் படித்து எழுதக் கற்றுக் கொள்ளச் செய்வதே.

எச்.ஜீ.வெல்ஸ்

பிறரைப் பாராட்டுங்கள்;பாராட்டுக் கிடைக்கும் பிறரை மதியுங்கள்;மதிப்புக் கிடைக்கும் அன்பு செலுத்துங்கள்;அன்பு தேடிவரும் இவை ஒற்றைப் பாதைகள் அல்ல; இரட்டை வழிப் பாதைகள்!

ஓய்வு இளைப்பாறுதல் அன்று;அது வேலையை விட அதிகம் களைப்பை அளிப்பதாகும். ஒன்றும் செய்யாதிருந்தால் இளைப்பாறுதல் கடினமாகும்.

தலைசிறந்த அறிவு யாதெனில் உறுதியாகத் தீர்மானித்தலே.

நெப்போலியன்

துன்பம் வந்து விடுமே என்ற பயம் துன்பத்தை விடத் துயரமானது;கொடியது.

ஹைஸா

இரண்டு பேர் எப்போதுமே திருப்தி அடைவதில்லை;அறிவைத் தேடுபவனும் செல்வத்தைத் தேடுபவனும்!

அரோபியா

யார் புகழ்ச்சியில் பேராசையுடையவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் தகுதியில் ஏழைகளாக இருப்பதை நிரூபிக்கிறார்கள்

புளூடார்க்

## நல்ல கலைஞன்

காற்றில் கலந்து நீராவி
காவப்பட்டு மேலாக
ஏற்ற குளிர்ச்சி பெறும் பொழுதே
இயல்பாய் ஒடுங்கி மழையாகும்.
ஆற்றற் கலைஞர் ஆயிடினும்
அவனா ஆறும் அக நிலைமை
போற்றும் படியாய் இருக்கையிற்றான்
பொழியும் புகழார் இலக்கியங்கள்

வி.கந்தவனம்

## அன்னிய அப்பிள்

அன்னிய நாட்டின்
அழகிய அப்பிள்
விற்பனையானது
விரைவுடனே!

எங்கள் நாட்டின்
கறுத்தக் கொழும்பான்
அழுகிக் கிடந்தது
கிட்டங்கி அருகே?

சாவித்திரி

## வலுவிழந்த வலு

இங்கு எவரும் நம்புகிறார்கள் இல்லை
நான் சொல்லும்
அவர்களின் சுயத்தை.

உண்மையை உண்மையாய்
உரைக்கக் கூடாதா....?
என் தேசத்தே இன்னும் நான்
ஊமை சமிஞ்சைதானா?

நான் உண்மை என்று
நினைத்த வரவும்
பொய்யுடன் பொய்யுடன்
புன்னகைத்து..

காத்திருந்த எம் விடிவை
விழுங்கும் இருளாய்
கைகோர்த்து.

நான் தீர்க்க தரிசியும் இல்லை
தீவிரவாதியும் இல்லை
நிஜங்களை பூக்கவிரும்பும்
சிறு கொடி.

மனித வாழ்வில் மகிழ்ச்சியை
புஸ்பிக்கத் துடிக்கும்
மொட்டு.

ஒரு குழந்தைக்கும் தெரியுமே
வேற்று முகம் எதுவென்று
எதிர்க்கும் அழும்-அது
அடம் பிடித்து வெருட்டும்
இங்கு ஏன் எவருக்கும்

நாளைய ஆட்சிக்காய்
அவாப்பிடித்து அந்தரத்தே
அலைந்து பறக்கும் ‘ஆலா’பறவை
கால் இடுக்கில் கோழிக்குஞ்சாய்
என் தேசத்தின் எதிர்காலம்?

மண்டூர் தேசிகன்

## வாழ்க்கை

நாம் எல்லோரும் பார்க்கின்றோம்
அவனை அருவருப்பாய் முகம் திருப்பி
அந்தப் பொய்க்கால் நொண்டியை

பிறவியா....? இடையிலா
எப்படி இப்படி ஆனால்
ஏன் அறிய இல்லை?

நீங்கள் வீசும் ஐம்பது நூறு
சதங்களில்
அவன் யாசிப்பு
நிறைகிறதா...?

நெண்டியா ஒண்டியா...?
குடும்பியா.......

வேகமாய் கழியும் நாட்களில்
ஒருதுளி ஒதுக்கி
விசாரித்து பார்ப்போமே இன்று

இளமையும் வலிமையும் இடறிப்போக
சபித்த இந்த வாழ்க்கைப் போரில்
அவனும் ஒரு இழை.

சமுத்திரத் துமியாய்
மண்ணின் துணிக்கையாய்
மறக்கப் பட்டது அவனது வாழ்க்கை.

காளை மாட்டுவண்டிக் காரனாய்
காதலித்து மணம் செய்தவனாய்
உழைத்தே உயர்ந்த உழவனாய்
அதுவரை தாங்கும் குடும்பத் தலைவனாய் ஆன
வாழ்க்கையைப் பொறிவெடி தின்றிடப்
போனது ஒருகால்.
வியர்வை நாற ஊத்தைத் துணியுடன்
அதோ வருகிறானே நொண்டி
அவனுக்கும் உண்டு வாழ்க்கை.

மண்டூர் தேசிகன்

# தாழை என்றால் தாழம்பூ அல்ல

"மடல் பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல் சிறியர் என்றிருக்கவேண்டாம்-கடல்பெரிது
மண்ணீரு மாகா அதனருகே சிற்றூறல்
உண்ணீருமாகி விடும்".

இது ஔவையாருடைய பாடல் இந்தப் பாடலுக்கு எல்லோரும் தவறாகப் பொருள் செய்கிறார்கள்.அதனால் இந்தப் பாடலுக்கு உண்மையான உரையை இங்கு எழுதுகின்றேன்.

பெரியவர்கள் உருவத்தால் சிறியவர்களாக இருப்பர்.அப்படி இருப்பினும் அவர்களைப் பெருமைப்படுத்த வேண்டும்.

> திருமுருக கிருபானந்தவாரி அவர்கள் சமயச் சொற்பொழிவாளர் மாத்திரம் அல்ல!அவர் ஒரு தமிழ்க் கவிதை விமர்சகருமாவார்.தாழை என்றால் தாழம்பூ அல்ல என்ற இந்தக் கட்டுரை அவரின் தேன் விருந்து என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டது!

சிறியவர்கள் உருவத்தால் அகன்று நீண்டு இருப்பர். செல்வத்தாலும் நிலபுலத்தாலும் மனைவி மக்கள் முதலிய சுற்றத்தாலும் பெரியவராயிருப்பர். ஆனால் அவர்களால் உலகத்திற்கு யாதொரு பயன் இராது.

சிறியருக்கு இரண்டு உவமைகூறுகின்றார்.சிறியர் மகிழ மலர் போல் இருப்பர்.பெரியர் மகிழ மலர் போல் நறுமணம் வீசி நன்மை செய்வார்கள்.கடல் நீர் யாருக்கும்,எதற்கும் பயன்படுவது இல்லை.அதன் அருகே உள்ள சிற்றோடையின் நீர் நமக்கு மிகவும் பயன்படுகின்றது.இதுதான் இந்தப் பாடலுடைய திரண்ட பொருள்:

தாழை என்ற சொல்லுக்குத் தாழம் பூ என்று தவறாகப் பொருள் செய்கிறார்கள்.தாழம்பூ பெரிய மடலை உடையதாக இருக்கிறது.

ஆனால் வாசனைஉடையதாகவும் நமக்குப் பயன்படுவதாகவும் இருக்கின்றது.நல்ல நறுமணம் வீசுகின்றது. சிவபெருமானைத் தவிர எல்லா மூர்த்திகட்கும் பூசைக்கு உதவுகின்றது. பெண்மணிகள் தலையில் சூடிக்கொள்கிறார்கள்.ஆனால் உவமைப்படி கடலைப்போல் தாழையும் மக்களுக்குப் பயன் படாததாக இருந்தால் அல்லவா பாடலின் நோக்கம் நிறைவேறும்! மகழம் பூவிற்கு எதிரிடையாக தாழம் பூவைக் கூறுவது பொருந்தாதே!

தாழை என்றால் தென்னை என்பது பொருள். தென்னை மரத்துக்குத் தாழை என்ற பெயர் உண்டு,என்பதற்குச் சான்று திருமுருகாற்றுப்படையில் 307வது வரியில்
''தாழை இளநீர் விழுக்குலை உதிர''என்று வருவதைக் காண்க! ஞானசம்பந்தர் தேவாரத்திலும் திருக்காளத்தி திருப்பதிகத்திலும் தென்னைகளைத் தாழை என்று கூறியிருப்பதையும் காணலாம்.

தென்னம்பூ மடல் பெரிதாக இருக்கும்.ஒரு துளி வாசனை இருக்காது. மக்களுக்குப் பயன்படாது. மகிழம்பூ மடல் சிறிதாக இருக்கும் நறுமணம் வீசும்.மக்கள் சூடிக் கொள்வார்கள்.நம்மாழ்வார் மகிழம்பூ மாலையைச் சூடிக் கொண்டிருப்பார். அதனால் அவருக்கு ''வகுளா பரணர்'' என்ற பெயரும் உண்டு.எப்படியோ மக்கள் தாழை என்ற சொல் தென்னைக்கு உண்டு என்பதை உணராமல் போய்விட்டார்கள்.இலக்கிய மரபில் தாழை என்பது தென்னைக்குப் பெயராக வருவதையும் மக்கள் கவனிக்கவில்லை.
ஆதலால் ''மடல் பெரிது தாழை''என்பதற்குத் தென்னம்பூ என்றே பொருள் கொள்ள வேண்டும்.இவ்வாறு பொருள் கொண்டால் பாடலின் நோக்கம் நிறைவேறும்!

தென்னம் பூவும் கடலும் பெரிதாக இருப்பினும் மக்களுக்குப் பயன்தருவதில்லை இந்த இரண்டும் சிறியர்கட்கு உவமைகளாகும். மகிழம்பூவும் சிற்றூறலும் மக்களுக்குப் பயன்தருகின்றன.இந்த இரண்டும் பெரியோருக்கு உவமைகளாகும்.

அமரர் திருமுருக கிருபானந்த வாரியார்

ஒலஒலஒல

## கவிதை ரவுண்ட் அப்

ஈழத்தின் எழுத்தாள நண்பனே நின்
எழுத்துக்குத் தமிழ்மொழியே மூச்சே என்றால்
கூழுக்குக் கொள்கையினை ஏலம் போடும்
கும்பலிலே நின்குரலேன் ஒலிக்கவேண்டும்?
தாழிட்டுத் தமிழ்த்தாயின் இதயந்தன்னை
தருக்கர்கள் தத்தளிக்கச் செய்யும் நேரம்
ஏழுடுக்கு மாளிகையில் இருந்து கொண்டே
எழுதி நீ குவித்துத்தான் என்ன காண்பாய்?

கரவைக்கிழார்

ஒலஒலஒல

# பெண்மணி

சமூக சேவையில் முன்னிற்கத்
தயங்காத குணம்
சகலரோடும் பழகுவதில்
தாராள மனம்
எவரோடும் எதற்குமே
ஏழாது சினம்
அடக்கம் இளநகை
அவளது வளம்
தமிழ்ப் பண்பாடு
அவளது தனம்

நினைத்து நான் ஏங்கியதுண்டு
எனக்கு மனைவியாய் இவள் இல்லையே என்று!

இதயத்தில் பொறாமை எழுந்ததுண்டு
கொடுத்துவைத்த அவள் கணவனைக் கண்டு!

எதுவரை?

நேற்றிரவு அவள்
வேற்றுமனிதன் கைகோர்த்து
மேனியில் அவன் கரம் மேயவிட்டு
விடலைப்பருவத்து உணர்வுகளின் மிதந்தாளே
கனவா அது நனவா என்று அதிர்ந்தேனே
அதுவரை!

அவுஸ்திரேலியாவிலிருந்து பாடும்மீன் சு.ஸ்கந்தராசா

# ஆசையைத் தீர்த்திட வா...!

கன்னக் குழிகளில்
மின்னிடும் சோதியென்
கண்களை வாட்டுதடி -அதை
அள்ளிப் பருகியென்
ஆவலைப் போக்கிட
கள்ளையே தந்துவிடு.

கன்னம் இரண்டிலும்
மின்னிடும் வண்ணமென்
கண்களை வாட்டுதடி -அதன்
கன்னச் சுவையினை
மெல்லச் சுவைத்திட
அன்னமே தந்துவிடு.

கொவ்வை இதழ்களை
கௌவிப் பருகிட
கோகிலமே தாராய் -உந்தன்
கோல விழிகளில்
வேலைப் பத்திட
கோமளமே வாராய்!

கார்கால வானக்
கருமுகிற் கூந்தலென்
ஆவலைத் தூண்டுதடி -அதில்
ஆயிரம் பூக்களை
அள்ளிச் செருகியென்
ஆசையைத் தீர்த்திடவா!

மையிட்ட கண்களின்
மான்விழிப் பார்வையென்
மார்பைத் துளைக்குதடி -என்னைக்
கைவிட்டு ஓடியென்
காதலைக் கொல்லாமல்
கன்னலே வந்துவிடு!

வானில் உலா வரும்
வட்ட நிலா உந்தன்
பட்டுடல் காட்டுதடி -தினம்
கிட்ட நெருங்கி நான்
கீதம் இசைத்திட
சிட்டே நீ வந்துவிடு!

முல்லைக்கொடியிடை
வில்லாய் வளைந்தென்னை
கொல்லாமல் கொல்லுதடி -மனம்
இல்லாமல் என்னை நீ
மாண்டிடச் செய்யாதே
முல்லையே வந்துவிடு!

எண்ணங்கள் யாவிலும்
மின்னலைப் போல் வந்து
பண்ணிடும் கோலம் என்ன? -உயிர்
உன்னில் கலந்துடல்
ஒன்றென வந்தபின்
ஒடுவ தேனடியோ?

வண்ணம் அழிந்த பின்
எண்ணம் இளமையில்
பண்ணுவ தென்னடியோ -அதன்
உண்மை உணர்ந்துடன்
ஒன்றிக் கலந்திட
ஓடியே வந்திடடி!

பூட்டிக் கிடக்கும் -உன்
வீட்டுக் கதவினை
கேட்டுத் திறந்திட்டி -என்
பாட்டை எழுதி நான்
படித்துக் களித்திட
ஏட்டை நீ தந்துவிடு!

எஸ்.முத்துமீரான்

# கம்பரும் அம்பிகாபதியும்

கம்பர் புலமைச் செவ்வியாற் சிறந்திருந்தது போலவே பெறதற்கரிய புதல்வனைப் பெற்றும் சிறப்பெய்தியவர் ஆவர். கம்பர் மகனான அம்பிகாபதி என்பவன் கம்பரின் தமிழ் வல்லமையில் சற்றும் குன்றாதவனாகவே விளங்கினான்.

இவனை ஒட்டக்கூத்தரின் மாணாக்கனாக அமர்ந்து கற்றுக் சிறப்பெய்தியவன் என்பார்கள்.அங்ஙனமாயின்,தாமே கவிவல்ல பெரும் புலவராக இருந்தும்,தம் ஒரே மகனை தமக்குப் பகையாக விளங்கிய கூத்தரிடம் கற்று வருவதற்கு விடுத்த கம்பரையும் அவனைத் தம் மாணாக்கராகக் கொண்டு கவித் திறமும் தமிழ்த்திறமும் ஒருங்கே பெற்றவனாக உருவாக்கிய கூத்தரின் தகுதியையும் நாம் வியந்து புகழ்ந்து பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

அம்பிகாபதியின் புலமையைக் கம்பர் அறிந்து பெரிதும் இறும்பூது கொண்டனர் என்பதனைச் சொல்ல வேண்டிய தில்லை.அத்துடன்,அவர் மகள் காவேரியின் பொலிவும் பண்பும் அவரைப் பெருமை கொள்ளச் செய்தன.

தம் மக்கள் பருவகாலத்தை நெருங்க நெருங்கக் கம்பரிடம் ஒரளவு சாந்தம் ஏற்பட்டது.அவர்களின் நல்வாழ்வினைக் கருதியவராக ஒருவாறு சூழ் நிலைகளைச் சகித்துக் கொண்டு போகவும் அவர் தொடங்கினார்.

சோழனுக்கும் அவருக்கும் இடையில் ஏற்பட்ட வேறுபாடு நீங்கின தென்றாலும்,அதன் விளைவாக இருவர் பாலும் கலந்த ஒருமைப்பாடு பின்னர் ஏற்படாமல் போயிற்று.இருவரும் கலந்து உரையாடின போது இடையிலே அநதப் பேத உணர்வின் சாயை மட்டும் இருந்து கொண்டு தான் இருந்தது.

இந்தச் சூழ்நிலையில் கம்பரின் வாழ்விலே எதிர்பாராத பல சிக்கல்கள் உருவாகி வளரத் தொடங்கின.அவற்றையும் அவற்றால் வந்துள்ள விபரீதமான விளைவுகளையும் இந்தப் பகுதியிற் காணப்படும் சில செய்யுட்கள் காட்டுகின்றன்.அவற்றை நாமும் காணலாம்

**கம்பர் திறம்.**

ஒருவருக்குப் புலமை வந்தடையும் போது அதனை தெய்வீக அருளினாலே வந்துற்றாதாக கொள்வதுதான். நம் நாட்டு மரபு அங்ஙனம் தெய்வீக அருள் பெற்ற புலவர்களிடம், தெய்வீக சக்திகள் பலவும் உண்டாயிருக்கும் என்றும் கூறப்படுகின்றது. இந்தக் கருத்தை ஒட்டிக் கம்பரின் திறத்தைக் காட்டுவது இந்தச் செய்யுள்.

ஒரு சமயம்,அரசன் நகர் சோதனை செய்பவனாக இரவில் நகரைச் சுற்றி வந்து கொண்டிருந்தான் அச்சமயம் காளி கோயிலில் அவன் ஒரு காட்சியைக் காண நேர்ந்தது. ஆண் பேய் ஒன்று காளிக்குச் சந்தனம் அரைத்துக் கொண்டிருந்தது.அதைக் கண்ட ஒரு பெண் பேய் ஆர்வத்துடன் அந்த சந்தனத்தை தொட்டு முகரத் தொடங்கியது.பய பக்தியுடன் காளி தேவிக்குச் சந்தனம் அரைத்துக் கொண்டிருந்த பேய்க்கு அதனால் பெரிதும் சினம் உண்டாயிற்று,அது சந்தனத்தை தொட்ட பேயின் கையை வெட்டி வீழ்த்தியது.

சோழன் அந்தக் காட்சியைக் கண்டதும் அச்சமும் வியப்பும் மேலெழத் தன் சோதனையை மீளவும் மேற்கொண்டான்.கம்பன் வீட்டை அடைந்தும்,அவனுக்கு ஓர் ஆர்வம் எழுந்தது.அந்தச் செய்தியைத் கம்பரிடம் சொல்லி விளக்கம் பெறலாம் என்று நினைத்தான் .

கம்பனின் வீட்டுக் கதவைச் சோழன் தட்டவும்,முதலில் விழித்துக் கொண்ட அம்பிகாபதி சென்று கதவைத் திறந்தான்.சோழனை வரவேற்ற கம்பர் ‘ஏது இவ்வேளையில் என்று வினவச்,சோழன் தான் ஒரு வியப்பான நிகழ்ச்சியைக் கண்டதாகச் சொன்னான். அப்போது அம்பிகாபதியும்,கம்பரும்

கரைக்கு வடக்கிருக்கும் காளிகால் அம்மைக்கு
அரைத்த வழி சாந்தைத் தொட்டப் பேய் - உரைத்தும்
மறைக்க வறியாத வன் பேயைக்
குறைக்குமாம் கூர்ங் கத்தி கொண்டு

என்னும் செய்யுளை ஆளுக்குப் பாதியாய்ப் பாடினர்.முற் பாதியை கம்பர் சொல்ல,அம்பிகாபதி பிற்பாதியைப் பாடி வெண்பாவை முடித்தான்.அம்பிகாபதியின் இளமையும் புலமையும் சோழனின் பால் வியப்பை நிறைத்தன.அம்பிகாபதியை பாராட்டி விட்டு அவன் சென்றான்.

ஆற்றங்கரைக்கு வடதிசையிலே காவல் தெய்வமாக வீற்றிருப்பவள் காளி.அவள் எலும்பு மாலையை அணிந்தவள்.அவள் உலக மாதாவாகவும் திகழ்பவள்.அவளுக்கு அரைத்து வழித்துக் கொண்டிருந்த சாந்தினை ஒரு பேய் தொட்டது. தன் தவறை உணர்ந்த அது அதனை மறுத்து உரைக்கவும் முற்பட்டது.எனினும் கையினின்றும் வெளிப்பட்ட மணத்தால் மறைக்க வகையறியாத படி தயங்கவும் செய்தது. அங்கிருந்த காவற் பேய் தன் கையிலிருந்த வளைந்த கத்தியைக் கொண்டு,வலிய பேயின் கையைக் துண்டித்தது......

(தொடரும்....)

நன்றி புலியூர் தேசிகன்

# சிறையை விதித்தது முறையா

•••••••••••••••••••••

அவலை நினைத்து உரலை இடித்த கதையா?
சுவரை இடித்து மனையில் இருக்க நினைவா?
நிலவை மறைக்க குடையைப் பிடித்தல் மதியா?
பழைமை மறந்து தலையில் பிடித்த கனமா?

விறகை எடுத்து வெயிலில் பரப்ப மழையா?
சிறகை ஒடித்து மயிலை விடுத்த நிலையா?
சிறையை விதித்து நிலையைக் குழப்ப சதியா?
அறையில் குதித்து உலகை மயக்க ஜதியா?

கனவை நினைத்து நனவை மறைத்த விதமா?
மனதை உடைத்து உறவைப் பதித்தல் எளிதா?
சுடரை அணைத்து இருளை அகற்ற முயல்வா?
இடரைக் கொடுத்து சமரை இழுக்க நகர்வா?

பயிரை அழித்து வெறுமை நிலத்தில் உரமா?
உயிலை நினைத்து உயிரைப்பறித்தல் முறையா?
தமரை அணைக்க பிறரை வருத்தல் தகுமா?
சமரை நிறுத்தி சதியில் விழுத்தக் கனவா?

எதனை நினைத்து எதனை விதித்த தெனினும்
அதனை நிறுத்தி அதனைத் திருத்த முடியும்?
இதனைத் தவிர்த்து எதனைப் பிடிக்க வரினும்
அதனின் விளைவை விரைவில் உலகம் புரியும்.

அவுஸ்திரேலியாவிலிருந்து பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா

Type d and desinged by S.Kajendran, T.Phone 065-22741

நல்ல டாக்கடர் இருக்கின்றார்கள்
நம் நாட்டில்!
இல்லை எனச் சொல்லவில்லை
ஈழ நாட்டில்!
ஆனாலும் நல்ல மருந்து
இல்லையெனில் என்ன சுகம்
இவர்களினால்?
கல்லாப் பெட்டியில் காசிருந்தாலும்
இல்லாத மருந்துக்கு விலை
கொடுக்கலாமா?
இல்லாத மருந்துப் பொருள் இல்லை
எனாது கொடுத்துக் காத்தான்குடியில் புகழ்
சேர்க்கும் மருந்துக்கடை

**யுஸ்லா பார்மசி**

**104/1, மெயின் வீதி,**
**காத்தான்குடி.**



FAX : 065-45042
MOBILE : 077-851007
M.M.A. LATHEEF



**சானா எம்போறியம்**

சானா சானா என்பதே எங்கும் பேச்சு!
ஆனா ஆவன்னா அறியாத
அப்பாவிப் பெருமக்களும்
சானா.... என்றால் ஆஹா என்பார்கள்
செங்கலடியில் புடவைக்கடை இல்லாத
குறையினைப் போக்கிய ஜவுளிக்கடை
இதுவன்றோ

- சிறுவர் உடைகள்
- மெல்லியலார் மென் உடைகள்
- ஆண்களுக்கான அத்தனை ஆடை வகைகளும்
- போட்டோ பிரதிகளும்

பெற்றுக்கொள்ளலாம் வாருங்கள்
இவ்விடம் வருங்காலம்



***சானா எம்போறியம்***



*இல. 41, திருமலை வீதி, செங்கலடி.*
*☎ 40013,40578*

# மீண்டும் சுவைத்திரள்

**மட்டு நகரில் பல ஆண்டுகள் வெளிவந்த சுவைத்திரள் நகைச்சுவை ஏடு புதிய பொலிவுடன் மீண்டும் வெளிவர உள்ளது. எழுத்தாளர்களே சிரிப்புடன் சிந்தனையைத் தேடும் எழுத்துக்கள் கார்ட்டூன்கள், சிரிகதைகள் எமக்குத் தேவை எழுதும் சகல விடயங்களுக்கும் சன்மானம் உண்டு விடயங்களை வேகமுடன் எதிர்பார்க்கின்றோம்.-**

**தொடர்புகள்**
**சுவைத்திரள்**
**481, பார் வீதீ,**
**மட்டக்களப்பு.**

உலகில் உள்ளவை ஐந்து கண்டங்கள்
ஆசியாவே பெரிய கண்டம்
தெரிந்த விசயம் இதுவன்றோ!
தெரியாத விசயம், புரியாத விசயம்
ஒன்றுண்டு
ஆசியன் ஹாட்வெயார் என்ற
பெயரில் ஒரு கடையுண்டு
அவரிடம் சீமெந்து தொடங்கி
விட்டோடு வரை உண்டு விற்பதற்கு!
இத்தனைக்கும் நாடுங்கள்

**ஏசியன் ஹாட்வெயார்**

**32B, பசார் வீதி,**
**மட்டக்களப்பு.**
**☎ 065-22994**

**பேத்தல் கெமிஸ்ட்**

**BETHEL CHEMIST**

அறிவீர்களா இவர்களை?
அறிந்து விட்டால் விடமாட்டீர்கள் இவர்களை
நோய்களின் இருப்பிடம் ஆஸ்ப்பத்திரி
அந்நோய்களை விலகி ஓடச் செய்யுமிடம்
*பேத்தல் கெமிஸ்ட்!!*
*உடலால் அழியின் உயிரால் அழிவர்!*
உடலில் உள்ள சகல நோய்களையும்
விரட்டியடிக்கும் மருந்தகம்

**பேத்தல் கெமிஸ்ட்**




**297, திருமலை வீதி,**
**மட்டக்களப்பு.**

**சென்றல் பேக்கரி**

*ஆண் என்றால் எல்லோரும்*
*ஆணல்ல!*
*பெண் என்றால் எல்லோரும்*
*பெண்ணல்ல!*
அதுமட்டுமல்ல
பாண் என்றால் எல்லாமே
பாணுமல்ல!
தரம் வேண்டும் : நாவுக்கு ருசியாக
இருந்தேயாக வேண்டும்.
*தரமான பாணுக்கு ருசியான கேக்கிற்கும்,*
*பிஸ்கட்டுக்கும் விஜயம் செய்யுங்கள்*

**சென்றல் பேக்கரி**



மெயின் வீதி,
செங்கலடி.



**ஈஸ்ரன் ரேடிங்**
**கொமினிக்கேசன்**

செங்கலடி நகரின் பிரதான சந்திப்பு
இவர்கள்
தொலைத் தொடர்பு என்றால் என்ன?
தொலையாத நோய்களினால்
அவஸ்த்தைப்படுவோருக்குச்
சரியான நேரத்தில் விற்பனை செய்யும்
மருந்தகத்தின் பெட்டகமும் இவர்களே!
தொடர்பு கொள்ளுங்கள்
ஈஸ்ரன் ரேடிங், கொமினிக்கேசன்
ஈஸ்ரன் மெடிக்கல்ஸ்.



**இல.54, மெயின் வீதி,**
**செங்கலடி.**
**065-40450. 065-40230**



வணசிங்கா பிரிண்டர்ஸ், 126/1 திருமலை வீதி, மட்டக்களப்பு